[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1990 சனவரி 19

1924ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி, 1974-வது ஆண்டு வரை, 50 ஆண்டுக்காலம் அந்த ஒப்பந்தம் நீடிக்கப்பட்டு அதற்குப் பிறகு, இன்றைக்கு ஆண்டு கொண்டிருக்கிற இந்த ஆட்சி, அன்றைய கால கட்டங்களிலே, 200 டி.எம்.சி. தண்ணீர் தான் விடுவேன் என்று கர்நாடக அரசு சொல்லிய நேரத்தில், அப்பொழுது வாதிட வேண்டிய இந்த ஆட்சி, தமிழ்நாட்டிலே நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகிற தஞ்சையிலே விளை நிலங்களில் எல்லாம், நெற் உற்பத்தியாகிற பகுதிகளுக்குத் தண்ணீர் பெறமுடியாமல், 1976-வது ஆண்டு மத்திய அமைச்சராக இருந்த ஜெகஜீவன்ராம் அவர்களுடைய தலைமையிலே, தமிழக முதல் அமைச்சரும், அதே போல், கர்நாடக முதல் அமைச்சரும் பேச்சு வார்த்தை நடத்தி, அந்தப் பேச்சு வார்த்தையின் அடிப்படையிலே, 400 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டுக்கு மேட்டூரிலே —காவிரியிலே விட வேண்டுமென்று ஒப்புதல் கேட்ட நேரத்தில் 100 டி.எம்.சி. தான் நாங்கள் குறைக்கிறோம், அதுவும், தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற வாய்க்கால்களை நவீனமயமாக்கி சீரமைக்கிற நேரத்தில், 20 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, ஆண்டுக்கு 5 டி.எம்.சி. குறைத்து, படிப்படியாகக் குறைத்து, 20 ஆண்டுகளில் 100 டி.எம்.சி. தண்ணீரைக் குறைத்து 300 டி.எம்.சி. தண்ணீர் அளிக்க ஒப்புதல் அளித்த பிறகு, தமிழ்நாட்டிலேயிருந்து அன்றைக்குப் பேச்சு வார்த்தை நடத்தச் சென்று முதல் அமைச்சர் அவர்கள், அன்றைக்கு ஒப்பந்தம் செய்யாத காரணத்தினால், இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறோம். இன்றைக்கு இங்கிருந்து அமைச்சர் செல்கிறார். கர்நாடக மாநில முதலமைச்சரைச் சந்திக்கச் செல்கிற நேரத்தில், கர்நாடக முதல் அமைச்சர் இருக்கிறாரா இல்லையா என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல், இங்கேயிருந்து கர்நாடக மாநிலத்திற்குச் சென்று முதல் அமைச்சரும், அங்கே இல்லை, அமைச்சரும் அங்கே இல்லை என்று சொல்லி, அமைச்சர் திரும்பி வருகிற அவல நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 1973-வது ஆண்டிலே நீங்கள் 100 டி.எம்.சி. யாவது தண்ணீர் பெற்றிருந்தால், இன்றைக்கு நெற் களஞ்சியம் என்று சொல்லப்படுகிற, நெல்லை உற்பத்தி செய்கிற....

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்கள், 300 டி.எம்.சி. தண்ணீர் தருவதாகவும், அதை ஒத்துக் கொள்ள முடியாது என்று ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போடாமல் வந்து விட்டதாகவும், மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு அப்படிப் பேசுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. உண்மைக்குப் புறம்பான செய்தியை அவையிலே கூறி, மக்களைக் குழப்புவது நல்லதல்ல. நான் பலமுறை, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது, பேசியிருக்கிறேன். காவிரி பிரச்னையைப் பொறுத்தவரையில், கட்சிச் சார்பில்லாமல் நாம் அதை அணுக வேண்டுமென்று குறிப்

பிட்டிருக்கிறேன். நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பொழுது பேசியிருக்கிறேன். அப்பொழுது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இருந்தபொழுது சொல்லியிருக்கிறேன். தி.மு.க. அரசு காவிரிப் பிரச்னையில் எந்த நிலையை எடுத்ததோ, அதே நிலையைத்தான் அ.தி.மு.க. வும் எடுத்து இருக்கிறது. எனவே, அதைப் பாராட்டுகிறோம் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே, தவறான வாதங்கலை வைக்கக் கூடாது. 1974-வது ஆண்டு காவிரி ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்ற ஒரு தவறான கருத்தை நாமே ஏற்றுக்கொள்ள முடியாது. அது கர்நாடக மாநிலத்தினுடைய வாதம். அதற்கு நாம் துணை போகக் கூடாது. காலாவதி ஆகவில்லை. சர்ப்ளஸ் வாட்டரை எப்படிப் பகிர்ந்துகொள்வது என்றுதான் 1974-ஆம் ஆண்டு தீர்க்க வேண்டுமென்று 1924-வது ஆண்டு ஒப்பந்தம். அதற்கு மாறான கருத்துக்களைக் கூறுவது தமிழ்நாட்டுக்கு நாமே நம்மை அறியாமல் ஒரு தேவையற்ற ஆபத்தை உருவாக்குவதாக ஆகிவிடும்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கர்நாடக முதல் அமைச்சர் அங்கே இருக்கிறாரா என்பது கூடத் தெரியாமல் சென்று திரும்பி வந்திருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். பொதுப் பணித் துறை அமைச்சருக்குக் கிடைத்த தகவல், கர்நாடக முதல் அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றிருக்கிறார். மீண்டும் கர்நாடகத்திற்கு வர இருக்கிறார் என்ற தகவலின் அடிப்படையில்தான் அவர் சென்றார். ஆனால், கர்நாடக முதல் அமைச்சர் அவர்கள் அங்கேயிருந்து அப்படியே டெல்லிக்குச் சென்று விட்டார் என்ற செய்தி கிடைத்தது. அதனால் தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. கர்நாடக முதல் அமைச்சர் தான் தன்னுடைய திட்டத்தை மாற்றிக் கொண்டார் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

12-55 மணி

*திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிற இடத்திற்கு எதிரிலே உறுப்பினர் உட்கார்ந்து இருக்கிற காரணத்தினாலே அவர்கள் பொதுப்பணித் துணை அமைச்சராகி விட்டார்களோ என்று தோன்றுகிறது. ஆனால் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் அல்ல என்பது எங்களுக்குத்தெரியும். பதில் சொல்ல வேண்டுமென்றால் இங்கே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கலாம். அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கலாம்.

இங்கே முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் அடுத்த விஷயத்திற்கு போவதற்கு முன்னால் இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு பிரச்சினையைக் குழப்பிவிட்டார்கள். மறுபடியும் இந்த நிலைமையைக் குழப்பிக்கொண்டு இறுதியாக கர்நாடகத்துக்காரர்களை தவறாக எடுத்துக்கொள்ளாத ஒரு நிலைமையை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில விளக்கங்களை இங்கே தந்தார்கள். 1976-ஆம் ஆண்டு மத்திய அமைச்சராக இருந்த ஜெகஜீவன்ராம் அவர்கள் தலைமையில் தான் இரண்டு மாநில அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றன. அப்போது என்ன பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கிற அனைத்துக் கட்சிகளையும் பொறுத்தவரையில் இன்றைக்கு எவ்வளவு தண்ணீரை நீங்கள் பெற்றுத் தருகிறீர்களோ .....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவரவர்களே, ஒரு 'சென்சிட்டிவ்' பிரச்சனை. அதனால்தான் நான் அடிக்கடி தலையிட வேண்டியதாக இருக்கிறது. நான் பதில் சொல்லும் போது நான்கு நாட்கள் கழித்துகூட சொல்லலாம். ஆனால் அதற்கிடையிலே உங்களுடைய பேச்சு பத்திரிகையில் வந்துவிடுமேயானால் அது கர்நாடக மாநிலத்திற்கு சாதகமாக ஆகிவிடும் என்பதால்தான் நான் குறுக்கிட விரும்புகிறேன். நீங்கள் பேசுகின்ற பேச்சு அவர்களுக்கு சாதகமாக ஆகிவிடக்கூடாது : தமிழ் நாட்டிற்குப் பாதகமாக ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் குறுக்கிடுகிறேனே அல்லாமல் வேறு அல்ல. அப்போது ஒரு ஒப்பந்தம் வந்தது. 100 டி. எம். சி. சிக்கனப்படுத்த—அதைக்கூட குறைத்துக்கொள்வது என்று குறிப்பிடக் கூடாது—100 டி. எம். சி. தண்ணீரை சிக்கனப்படுத்த—'மார்டனைசேஷன்' மூலமாக தமிழ்நாட்டிலே 100 டி. எம். சி. தண்ணீரை சிக்கனப்படுத்த ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்த ஒப்பந்த வரைவு வந்தபோது சில 'டெக்னிக்கல் டெர்ம்ஸ்' நமக்கு சரி வரவில்லை. எந்த இடத்திலே இருந்து சீர் செய்வது, எங்கே இருந்து தண்ணீரை அளப்பது என்பதிலே அந்த ஒப்பந்தம் நமக்கு சரிவரவில்லை. எனவே தான் கையெழுத்துப் போடாமல் வந்தோம். தமிழ்நாட்டின் நன்மைக்காகச் செய்யப்பட்ட காரியம் அது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே அதை விட்டுவிட்டு வேறு பிரச்சனைகளுக்கு நான் வருகிறேன். காரணம் முதலமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். தமிழ்நாடு